# வெற்றிட அறிவித்தல்
# மத்திய மாகாண சபையின் கால் நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடம்
# மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

மத்திய மாகாண சபையின் கால் நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு இலங்கை கால் நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் 1 ஐச் சேர்ந்த தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள குறித்த பதவிற்கு உரித்தான சேவையில் இருக்கும் தகைமைகளையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. ஆட்சேர்ப்பு முறை

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் திறமை வரிசையின் அடிப்படையில் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும். தனது துறை சார்ந்த பட்டப்பின் படிப்பு அல்லது அது தொடர்பான அதியுயர் தகுதி பெற்றிருத்தல், சேவைக் காலம், விடயம் சார் அறிவு, நிருவாகத் திறன் மற்றும் கல்வித் தகைமைகள் என்பன பற்றி நேர்முகப் பரீட்சையின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

இப்பதவிக்கான நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் பின்வரும் அடிப்டையில் வழங்கப்படும்.
புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் ( உச்சப் புள்ளி 100)

| | |
|---|---|
| 1. சிரேஷ்ட நிலை | புள்ளிகள் 40 |
| 2. நிதி முகாமைத்துவம் | புள்ளிகள் 10 |
| 3. அபிவிருத்தி தொடர்பான அறிவு | புள்ளிகள் 15 |
| 4. நிர்வாகம் தொடர்பான அறிவு | புள்ளிகள் 10 |
| 5. பட்டப் பின்படிப்பு | புள்ளிகள் 05 |
| 6.வெளியீடுகள்<br>விசேட திட்டங்கள் | புள்ளிகள் 05 |

8. கடந்த 5 வருடங்களுக்கான சேவை விவரணக் குறிப்பைக் கவனத்திற்கொண்டு,

| | |
|---|---|
| a. மிகவும் நன்று | புள்ளிகள் 3x5 =15 |
| b. நன்று | புள்ளிகள் 2x5 = 10 |
| c. சாதாரணம் | புள்ளிகள் 1x5 = 5 |

## 02. தேவையான தகமைகள்

1. மிருக வைத்திய விஞ்ஞானம் தொடர்பான பட்டத்துடன் இலங்கை கால் நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 03 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தராக இருத்தல்”

2. 2016.07.11 ஆம் திகதியன்று இலங்கை கால்டை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் குறைந்த பட்சம் 10 வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்

3. எந்தவொரு ஒழுக்காற்று செயற்பாடுகளுக்குமோ அல்லது தண்டணைகளுக்கோ உடன்படாதிருத்தல்.

4.தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : - **தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வெண்டும்**

**03. விண்ணப்பிக்கும் முறை**

முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2016 ஜூலை 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, த.பெ. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (மத்திய மாகாண சபையிற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சுச் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன் அனுப்புதல் வேண்டும்). விண்ணபத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **" மத்திய மாகாண கால் நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல் "** என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தனது விண்ணப்பங்களை வெவ்வேறாக அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திராத, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் குறிப்பிட்ட மாதிரிக்கு புறம்பாகவும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைபாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.psc.cp.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண கௌரவ ஆளுனரிற்குறியதாகும்.

இவ்வறிவித்தல் தொடர்பில் தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு தொடர்பாக ஏதேனும் கருத்துவேறுபாடுகள் காணப்படின், சிங்கள மொழிபெயர்ப்பே கவனத்திற் கொள்ளப்படும்.

கை/இ: ஆர். எம். என். ரத்நாயக்க
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2016 ஜூன் மாதம் 24 ஆம் திகதி .
மத்திய மாகாண சபையின்
அரச சேவைகள் ஆணைக்குழுவில்.